**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக் கற்கைகள் துறை**
**சட்டமாணிப் பட்டக்கற்கை – மட்டம் III**
**இறுதிப் பரீட்சை – 2023/2024**
**ஒப்புரவுக் கொள்கைகள் – LLU3502**
**காலம்: 03 மணித்தியாலங்கள்**

**திகதி: 20.05.2025** **நேரம்: பி.ப. 01.30 – பி.ப. 04.30**

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 08**

**பகுதி I இலிருந்து ஒரு வினாவையும் பகுதி II இலிருந்து நான்கு வினாக்களையும் தேர்ந்தெடுத்து, மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.**

## பகுதி I – ஒப்புரவுக் கொள்கைகள்

01. ஒப்புரவுக் கொள்கையின் வரலாற்று வளர்ச்சியினை ஆங்கில சட்ட முறைமையில் அதனது தோற்றம் முதல் நவீன சட்டக் கட்டமைப்பில் அதன் ஒன்றுசேர்வு வரை ஆராய்க. உமது விடை தொடர்புடைய அதிகாரங்களுடன் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

02. "ஒப்பரவு முதுரையொன்று குறிப்பானதொரு விதியோ அல்லது சட்டத்தின் கொள்கையோ அல்ல. இது ஒப்பரக் கருத்துகளையும் கொள்கைகளையும் அடிக்கோடிட்டுக் காட்டும் ஒரு பரந்த கருப்பொருளின் சுருக்கமான அறிக்கையொன்றாகும்."

*Snell's Equity, 34th Edition, Sweet & Maxwell 2020, p.104*

மேற்கண்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?
பின்வரும் ஒப்புரவு முதுரைகளை விசேடமாகத் தொடர்புறுத்தி உமது விடைக்கான காரணங்களைத் தருக. உமது விடை தொடர்புடைய தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(i) ஒப்புரவு ஆள்சார்ந்தே தொழிற்படுகிறது
(ii) ஒப்புரவு தவறொன்று பரிகாரமற்றிருப்பதை அனுமதிக்காது

(20 புள்ளிகள்)

## பகுதி II – நம்பிக்கைகள் சட்டம்

03. (அ) "நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02 ஒரு *casus omissus* விடயத்தில் ஆங்கிலச் சட்டத்தின் கொள்கைகளைப் பயன்படுத்த அனுமதிக்கின்றது."

மேற்கண்ட கூற்றின் பின்னணியில் இலங்கையின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02 இன் பயன்பாட்டை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க. தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(12 புள்ளிகள்)**

(ஆ) நம்பிக்கை மற்றும் *fideicommissum* ஒன்றுக்கிடையேயான வேறுபாடுகளை ஆராய்க

**(8 புள்ளிகள்)**

04. திருமதி பெர்னாண்டோவின் இறுதி விருப்பாவணத்திலுள்ள பின்வரும் கைளிப்புக்கள் வலிதான நம்பிக்கையொன்றை உருவாக்குமா என ஆராய்க.

(அ) எனது நடனக் கல்விக்கூடத்தின் வருடாந்த வருமானத்திலிருந்து நியாயமான தொகையொன்று எனது மகள் நயனாவுக்கு, அவளது மகன் ருமித்தின் நலனுக்காக பயன்படுத்தப்படும் நோக்கில்;

(ஆ) எனது குடும்பத்தின் மிகவும் விரும்பத்தக்க உறுப்பினர்களிடையே பகிர்வார் என்ற நம்பிக்கையில், பண்டாரவளையில் அமைந்துள்ள எனது தேயிலைத் தோட்டம் எனது சகோதரியான களனிக்கு;

(இ) எனது நாய்களின் நலனுக்காக கொட்டில் ஒன்றை அமைக்கப் பயன்படுத்துவதற்காக, எனது சேமிப்புக்கு கணக்கிலிருந்து ரூபா 1 மில்லியன் எனது சகோதரனான கபிலவுக்கு;

(ஈ) எனது 16 வயதுப் பேரனான நுவித் தனது உயர்படிப்புக்குப் பயன்படுத்த ரூபா 2 மில்லியன்.

(5x4 =20 புள்ளிகள்)

05. (அ) தமித் என்பவன் கார் விற்பனை உரிமையாளன் ஒருவனாவதுடன் இலங்கையில் விதிக்கப்பட்ட கார் இறக்குமதி தடை காரணமாக அவனது வணிகம் கடன் தீரக்க வகையற்றுப்போனது. இதன் விளைவாக, அவனது கடன் வழங்குநர்கள் அவன் (கடன்களை) திருப்பிச் செலுத்தக் கோரிப் பின்தொடர்ந்தனர். இருப்பினும், தமித் சில தனிப்பட்ட சேமிப்புகளைக் கொண்டிருந்ததுடன் அதனை காணியொன்றை வாங்கப் பயன்படுத்த விரும்பினான். தமித்தின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான கமால் என்பவன் (தமித்தின்) கடன்கள் தீர்ந்தவுடன் அதை பின்னர் தமித்துக்கு மாற்றுவான் என்ற புரிதலுடன் தனது பெயரில் அச்சொத்தை (காணியை) வாங்க ஒப்புக்கொண்டான். தமித் அச்சொத்துக்கான பிரதிபலன் முழுவதையும் செலுத்தினான். சில மாதங்களுக்குப் பிறகு, தமித் தனது கடன்களைத் தீர்த்துக் கொண்டதோடு அச்சொத்தை தனது பெயருக்கு மாற்றுமாறு கமாலைக் கேட்டான். இருப்பினும், கமால் தற்சமயம் அவ்வாறு செய்ய மறுக்கின்றான்.

தமித்துக்கு ஆலோசனை வழங்குக.

**(10 புள்ளிகள்)**

(ஆ) இலங்கையில் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் கீழுள்ள *'முன்னளித்தல் பற்றிய ஊகத்தின்'* (*presumption of advancement*) பிரயோத்தன்மையை விளக்குக. உமது விடையை தொடர்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

06. "சட்டம் பொதுத்தன்மை எனும் தன்மையொன்று இல்லாதவரைக்கும் நோக்கத்தினை தருமமாக அங்கீகரிப்பதில்லை என்பது அனைத்துலக விதியொன்றாகும். அதாவது, நோக்கமொன்று சமூகத்தின் நலனுக்கோ அல்லது சமூகப் பிரிவொன்றின் நலனுக்கோ வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்."

Lord Greene M.R. in *Re Compton* [1915] Ch. D. 123 at 128.

மேற்கண்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?

இலங்கைச் சட்டத்தை ஆங்கிலச் சட்டத்துடன், தொடர்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தின் நிழலில் ஒப்பிடுவதன் மூலம், உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(20 புள்ளிகள்)

07. தனபால என்பவன் கம்பொலயில் அமைந்துள்ள 50 ஏக்கர் தேயிலைத் தோட்டம் ஒன்றினதும் தனிமாடி வீடு ஒன்றினதும் நம்பிக்கையாளனாவான். நம்பிக்கையின் பயனாளிகள் ராணி என்பவளும், அவளது இருமகன்களான கலும் மற்றும் திலும் என்போராவர். தனபால தனிமாடி வீட்டினை ராணியின் சம்மதத்துடன் சுற்றுலா விடுதியொன்றாக மாற்ற புதுப்பித்தல் வேலைகளை மேற்கொண்டான். புதுப்பித்தல் வேலையின் போது அவனும் அவனது குடும்பமும் கம்பொலயிலுள்ள சொகுசு விடுதியொன்றில் தங்கியிருந்தனர். புதுப்பித்தல் வேலைகள் முடிந்ததும், ராணி மற்றும் அவளது மகன்களிடம் புதுப்பித்தல் வேலையின் செலவினங்களைச் செலுத்துமாறு தனபால கோரினான். இச்செலவினங்கள் தனபாலவும் அவனது குடும்பமும் சொகுசு விடுதியில் தங்கிருந்தமைக்கான செலவுகளையும் உள்ளடக்கியிருந்தது. தனபால தனிமாடி வீட்டின் புதுப்பித்தல் வேலையில் கவனம் செலுத்தியதால், தேயிலைத் தோட்டத்தை சரியாக நிர்வகிக்கத் தவறியதுடன் சரியான நேரத்தில் உரத்தை வழங்கவுமில்லை. இதனால் தோட்டத்தின் தேயிலை உற்பத்தி குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி கண்டது. கலுமுக்கு தற்சமயம் 18 வயதாவதுடன் அவன் வெளிநாட்டுப் பட்டப்படிப்பு ஒன்றைத் தொடர விரும்புகின்றான். இதனால் அவன் தேயிலைத் தோட்டத்தின் 10 ஏக்கர்களை விற்குமாறும் தனது உயர் படிப்புக்கு பணத்தை வழங்குமாறும் தனபாலவை கேட்டுக்கொண்டான். தனபால தனது சகோதரனான ஜினபால என்பவனுக்கு 10 ஏக்கர் நிலத்தை கலுமுக்குத் தெரிவிக்காமல் மிகக் குறைந்த விலையொன்றுக்கு விற்றான்.

திறத்தவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புடைமைகள் பற்றி ஆராய்க. உமது விடை நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் தொர்புடைய ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

**(20 புள்ளிகள்)**

08. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் ஏதேனும் <u>இரண்டுக்கு (02)</u> சிறுகுறிப்பெழுதுக.

(அ) நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 90

(ஆ) சை-பிரஸ் கோட்பாடு

(இ) முடிவற்ற தொடர்ச்சிக்கு (perpetuities) எதிரான விதி

(ஈ) நம்பிக்கை ஆதனத்தைப் பின்தொடர்வதற்குள்ள பயனாளியின் உரிமை

**(10x2 = 20 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது-*